**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 11** **Date : 21.11.2025.**

| Name : சிலம்பரசன் | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து சிவில் பொறியாளராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனது என் மாமா செம்பா கவுண்டர் ஆவார். கடந்த 15.10.2023 ம் தேதி அன்று மாலை 3.15 மணிக்கு இரு சக்கர வாகனத்தில் என் மாமா செம்பா கவுண்டர் பொட்டனேரியிலிருந்து மேட்டூர் நோக்கி சென்று கொண்டிருந்த போது பல்கர் லாரி மோதி விபத்து ஏற்பட்டது. அந்த சமயத்தில் நான் மேச்சேரியிலிருந்து மேட்டூர் நோக்கி சென்று கொண்டிருந்த போது HP பெட்ரோல் பங்க் அருகே இரு சக்கர வாகனத்தில் சென்ற போது விபத்தை நேரடியாக பார்த்தேன்.

2) விபத்தின் காரணமாக என் மாமாவிற்கு நுரையீரல், தலை, கண் மற்றும் காதில் குச்சி குத்தி காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது சிகிச்சை பலனின்றி இறந்து போய்விட்டார். ஆஜர் எதிரி தான் விபத்தை ஏற்படுத்திய லாரி ஓட்டுநர் என சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார். என் மாமா ஓட்டிச் சென்ற இரு சக்கர வாகனம் CT 100 அதன் பதிவெண் நினைவில்லை. பல்கர் லாரி பதிவெண் எனக்கு தெரியவில்லை.

விபத்திற்கு பல்கர் லாரி இறக்கத்தில் வேகமாக வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

3) சத்தியசீலன், பாக்கியராஜ், குருசித்திரன் ஆகியோரை தெரியுமா என்றால் உறவினர்கள் ஆவார்கள். சத்தியசீலன் என்ன உறவு என்றால் என் பள்ளி நண்பர் ஆவார். விபத்து ஏற்பட்டவுடன் சம்பவயிடத்தில் இருந்தவர்கள் தான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள் என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் இருந்த பாக்கியராஜ் என்பவர் தான் ஆம்புலன்ஸ் வைத்து என் மாமாவை அழைத்து வந்தார் என்றால் ஆமாம்.

4) பாக்கியராஜ் தான் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார். என் மாமா தான் வலது பக்கமாக சாலையை கடந்தார் என்றால் ஆமாம். என் மாமா தான் சாலையின் குறுக்கே கடந்தார் என்றால் ஆமாம் பெட்ரோல் போடுவதற்காக சென்றார். லாரி என் மாமாவிற்கு தெரிந்திருக்க வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. லாரியை பார்த்துவிட்டு தான் என் மாமா பெட்ரோல் பங்கிற்கு செல்ல திரும்பியிருப்பார் என்றால் ஆமாம். அவ்வாறு ரோட்டில் குறுக்கே வராமல் இருந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றால் ஆமாம். ஆனால் லாரி தூரத்தில் வந்து கொண்டிருந்தது.

5) சம்பவயிடத்தில் பெட்ரோல் பங்கில் உள்ளவர்கள் தான் என் மாமாவிற்கு தண்ணீர் கொடுத்து உட்கார வைத்தார்கள் என்றும் ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்திருப்பார்கள் என்றால் ஆமாம். சத்தியசீலன் என்பவருக்கு வேறு ஒரு நபர் விபத்து பற்றி சொல்லி மருத்துவமனைக்கு வந்தார் என்றால் சரிதான். விபத்து சம்மந்தமாக பாக்கியராஜ் எனக்கு தகவல் சொன்னாரா என்றால் நான் சம்பவயிடத்திற்கு வந்துவிட்டேன். நான் பின்னால் இரு சக்கர வாகனத்தில் வந்துவிட்டேன்.

6) நான் எந்த வாகனத்தில் வந்தேன் என்றால் யமாஹா வாகனத்தில் வந்தேன். இழப்பீடு கேட்டு என் மாமா வாரிசுகள் மனுதாக்கல் செய்துள்ளார்கள் என்றால்

ஆமாம். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை தனிப்பட்ட முறையில் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாக்குமூலம் வாங்கியிருப்பார்கள். ஆனால் எனக்கு தெரியவில்லை. நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை. சாட்சி மேற்படி வாக்குமூலத்தில் இரண்டு கையொப்பம் செய்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது ஒரு கையொப்பம் செய்ததாக சொல்கிறார்.

7) விசாரணையில் என்ன எழுதப்பட்டிருந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும் மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 96/2025**

**Prosecution witness : அ.சா. 12** **Date : 21.11.2025.**

| | |
|---|---|
| **Name : காமராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் ஆண்டிக்கரையில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்கிறேன். விபத்தில் இறந்து போனது என் சித்தப்பா செம்பா கவுண்டர் ஆவார். கடந்த 15.10.2023 ம் தேதி அன்று மாலை 3.15 மணிக்கு இரு சக்கர வாகனத்தில் என் சித்தப்பா செம்பா கவுண்டர் சிடி 100 இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது பெட்ரோல் பங்க் அருகே இரு சக்கர வாகனத்தில் சென்ற போது லாரி மோதி விபத்து ஏற்பட்டது.

2) விபத்தின் காரணமாக என் சித்தப்பாவிற்கு தலை, கண் மற்றும் காதில் காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைக்காக சேர்த்தார்கள். பிறகு மேல் சிகிச்சைக்காக சேலம் கோகுலம் மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது சிகிச்சை பலனின்றி இறந்து போய்விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யாருடைய கவனக்குறைவால் சம்பவம் நடந்தது என்று நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.